நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வேளாண் பல்கலை. துணைவேந்தருக்கு விருது**

First Published : 15 Dec 2010 09:26:52 AM IST

கோவை, டிச. 14: இந்திய உரச் சங்கம் வழங்கும் சிறந்த ஆராய்ச்சிக்கான விருதை கோவையில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பி.முருகேசபூபதி, பேராசிரியர்கள் ஆர்.சாந்தி, ஆர்.நடேசன் ஆகியோர் பெற்றுள்ளனர்.

காய்கறிப் பயிர்களில் சிறந்த உர மேலாண்மை ஆராய்ச்சிக்காக இவ் விருது வழங்கப்பட்டுள்ளது. தில்லியில் அண்மையில் நடைபெற்ற இந்திய உரச் சங்கத்தின் வருடாந்திர கருத்தரங்கில் மத்திய அமைச்சர் மு.க.அழகிரி இந்த விருதுகளை வழங்கினார். இது தங்கப் பதக்கம், சான்றிதழ், ரூ. 20 ஆயிரம் ரொக்கப் பரிசு ஆகியவற்றை உள்ளடக்கியது.

சிறிய வெங்காயம், வெண்டை, முட்டைகோஸ், காரட், உருளைக் கிழங்கு, மிளகாய், மரவள்ளி ஆகிய காய்கறிப் பயிர்களின் சாகுபடிப் பகுதிகளுக்கேற்ற மண்ஆய்வு அடிப்படையிலும், விளைச்சல் இலக்கிற்கு ஏற்பவும் ஒருங்கிணைந்த உரப் பரிந்துரைகளை வரையறுத்த ஆராய்ச்சி முடிவுகளுக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

**நெற்பயிரில் ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்க யோசனைகள்**

First Published : 14 Dec 2010 02:29:45 PM IST

கடலூர், டிச.13: வடகிழக்குப் பருவ மழையால் பாதிக்கப்பட்ட நெல் பயிரில் ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்க, வேளாண் துறை சார்பில் கீழ்காணும் பரிந்துரைகள் அளிக்கப்படுகிறது.

கடலூர் வேளாண் உதவி இயக்குநர் சீ.இளவரசன் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கடலூர் வட்டாரத்தில் வடகிழக்குப் பருவ மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உரிய பரிந்துரைகளை எடுத்துரைக்க, வேளாண் விஞ்ஞானிகளும் அலுவலர்களும் தூக்கணாம்பாக்கம், பள்ளிப்பட்டு, நடுவீரப்பட்டு, வானமாதேவி, பெத்தாங்குப்பம், திருவந்திபுரம், ஓட்டேரி, சான்றோர்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் பயிர்களை ஆய்வு செய்தனர்.

ஊட்டச்சத்து குறைவான நெல் பயிருக்கு ஏக்கருக்கு 42 கிலோ அம்மோனியம் சல்பேட்டுடன் பொட்டாஷ் உரம் 17 கிலோ கலந்து இடவும், அல்லது பொட்டாஷ் உரத்துடன் 22 கிலோ யூரியா, 16 கிலோ ஜிப்சம் கலந்து மேலுரமாக இடவும் பரிந்துரைக்கப் படுகிறது.

இலை சுருட்டுப்புழு தாக்குதல் தென்பட்டால், நெல் வயல்களில் புரபனோபாஸ் 2 மில்லி லிட்டர் மற்றும் 1 சதவீதம் அசடிராக்டின் 1 மில்லி, ஒரு லிட்டர் தண்ணீரில் ஓட்டும் திரவத்துன் கலந்து தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

இலை உறை அழுகல் ஆரம்ப நிலையில் உள்ள வயல்களில், சூடோமோனாஸ் ஏக்கருக்கு 100 கிராம், 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். மேற்கண்ட பரிந்துரைகளைக் கடைபிடிப்பதன் மூலம், மழையினால் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து பயிர்களைப் பாதுகாத்து, மகசூல் இழப்பினை தவிர்க்க முடியும் என்றும் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

**பயிர் காப்பீட்டுத் திட்ட பிரீமியம் செலுத்தும் தேதியை நீட்டிக்கக் கோரிக்கை**

First Published : 14 Dec 2010 11:37:38 AM IST

சிவகங்கை, டிச. 13: சிவகங்கை மாவட்டத்தில் விவசாயிகள் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேருவதற்கு பிரீமியம் செலுத்தும் தேதியை நீட்டிப்புச் செய்ய வேண்டுமென தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக இச் சங்கத்தின் மாவட்டத் தலைவர் எல். ஆதிமூலம் விடுத்துள்ள அறிக்கை: பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் வங்கிகளில் பிரீமியம் தொகை செலுத்துவதற்கு அந்தந்தத் தாலுகா அலுவலகங்களில் விவசாயிகள் 10-க்கு 1 நகல் பெற்று அதை வங்கியில் கொடுத்து காப்பீட்டுக்கான பிரீமியம் தொகையைச் செலுத்த வேண்டும். சிவகங்கை மாவட்டத்தில் இந்த நகலை வாங்குவதற்கு அனைத்து தாலுகா அலுவலகங்களிலும் விவசாயிகளின் கூட்டம் அதிகமாக உள்ளதால், நகல் வழங்க கால தாமதம் ஏற்படுகிறது. இதனால் வங்கிகளில் பிரீமியம் தொகை செலுத்துவதற்கு தாமதம் ஏற்படுகிறது.

எனவே, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்து சிவகங்கை மாவட்டத்தில் பயிர் காப்பீட்டுக்கான பிரீமியம் செலுத்துவதற்கான தேதியை கால நீட்டிப்புச் செய்ய வேண்டுமென தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

**முட்டை விலை**

First Published : 14 Dec 2010 10:33:51 AM IST

நாமக்கல், டிச.13: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ. 2.50, சென்னையில் ரூ. 2.60.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 36, முட்டைக் கோழி கிலோ ரூ. 34.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 120.05 அடி**

First Published : 14 Dec 2010 12:52:39 PM IST

தஞ்சாவூர், டிச. 13: மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 120.05 அடியாக இருந்தது.

அணைக்கு வினாடிக்கு 6,969 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 6,316 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது.

கல்லணையில் இருந்து வினாடிக்கு காவிரியில் 2,016 கனஅடி, வெண்ணாற்றில் 529 கனஅடி, கல்லணைக் கால்வாயில் 1,500 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. கொள்ளிடத்தில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

**நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு தொடக்கம்**

First Published : 14 Dec 2010 02:13:03 PM IST

குடியாத்தம், டிச.13: கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் குடியாத்தம் பகுதியில் நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு தொடக்க விழா இங்குள்ள டி.பி. பாளையம் கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் பி. ஆறுமுகம் தலைமை தாங்கினார். எம்எல்ஏ ஜி. லதா, மருத்துவப் பிரிவு மற்றும் வாகனத்தை தொடங்கி வைத்துப் பேசினார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் நா. அருள்ஜோதிஅரசன், கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் எஸ். மோகன்தாஸ், ஒன்றியக் குழுத் தலைவர் காஞ்சனா சந்திரபாபு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முல்லைப் பெரியாறு அணையில் டிசம்பர் 21-ல் உயர்நிலைக் குழு ஆய்வு

First Published : 15 Dec 2010 12:42:00 AM IST

Last Updated : 15 Dec 2010 12:43:39 AM IST



தேனி, டிச. 14: உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஐந்து பேர் அடங்கிய உயர்நிலைக் குழுவினர், முல்லைப் பெரியாறு அணையில் டிசம்பர் 21-ம் தேதி ஆய்வு மேற்கொள்ள உள்ளனர்.

முல்லைப் பெரியாறு அணையின் பலம் குறித்தும், அணையின் நீர் தேக்கும் அளவை உயர்த்துவது குறித்தும் ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஏ.எஸ்.ஆனந்த் தலைமையில் ஐந்து உறுப்பினர்கள் அடங்கிய உயர்நிலைக் குழுவை உச்ச நீதிமன்றம் நியமித்தது.

தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஏஆர்.லட்சுமணன், கேரள அரசு சார்பில் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே.டி.தாமஸ், மத்திய அரசு சார்பில் மத்திய நீர்வளத் துறை அமைச்சக முன்னாள் செயலர் சி.டி.தட்டே, மத்திய நீர்வள ஆணையத்தின் ஓய்வுபெற்ற தலைமைப் பொறியாளர் டி.கே.மேத்தா ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

கடந்த அக்டோபர் 15-ம் தேதி தில்லியில் நடைபெற்ற உயர்நிலைக் குழு ஆலோசனைக் கூட்டத்தில் முல்லைப் பெரியாறு அணையை நேரில் ஆய்வு செய்ய முடிவு எடுக்கப்பட்டது. இதன்படி, முல்லைப் பெரியாறு அணையில் உயர்நிலைக் குழுவினர் டிசம்பர் 21-ம் தேதி ஆய்வு செய்ய உள்ளனர்.

இதுகுறித்து தேனி பொதுப் பணித் துறையினர் கூறியதாவது: டிசம்பர் 20-ம் தேதி தேனிக்கு வருகை தரும் உயர்நிலைக் குழுவினர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர், தமிழக பொதுப் பணித் துறை பொறியாளர்களுடன் ஆலோசனை நடத்துகின்றனர்.

அன்று இரவு தேக்கடியில் தங்கி, டிசம்பர் 21-ம் தேதி நவீன தொழில்நுட்ப முறையில் அணையின் பலத்தை ஆய்வு செய்கின்றனர். 22-ம் தேதி காலை கொச்சியில் கேரள பொதுப் பணித் துறையினருடன் ஆலோசனை நடத்துகின்றனர்.

உயர்நிலைக் குழுவுடன் தமிழக பொதுப் பணித் துறை முதன்மைச் செயலர் தனவேல், தில்லி அட்வகேட் ஜெனரல்கள் நெடுமாறன், கிருஷ்ணமூர்த்தி, உமாபதி, உள்நாட்டு நீர்வள ஆதார அமைப்பு காவிரி தொழில்நுட்ப பிரிவுத் தலைவர் சுப்பிரமணி, நிர்வாகப் பொறியாளர்கள் ராமச்சந்திரன், செல்வராஜ், நீர்வள ஆதார அமைப்பு முதன்மைப் பொறியாளர் குமரேசன், பெரியாறு வைகை வடிநில கோட்ட கண்காணிப்புப் பொறியாளர் விஜயகுமார், மேற்பார்வைப் பொறியாளர் ஆதம் மொய்தீன், கேரள நீர்ப் பாசனத் துறை செயலர் ஜெயக்குமார், நீர்ப் பாசனத் துறை முதன்மைப் பொறியாளர் லத்திகா, உள்நாட்டு நீர்வள ஆதார அமைப்பு இயக்குநர் சதி, ஐ.ஆர்.டி.பி. உதவி இயக்குநர் சீமா ஜார்ஜ், நீர்வள ஆதார அமைப்பு இயக்குநர் ஜார்ஜ் டேனியல் ஆகியோர் ஆய்வில் பங்கேற்கின்றனர் என்றனர்.

**தமிழகம், புதுவையில் இன்று மழை பெய்ய வாய்ப்பு**

First Published : 15 Dec 2010 12:41:58 AM IST



சென்னை, டிச. 14: தமிழகம், புதுவையில் சில இடங்களில் புதன்கிழமை இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலத்தின் உயர் அடுக்குகளில் மேகக் கூட்டங்களிடையே ஏற்பட்டுள்ள சுழற்சி காரணமாக தமிழகம், புதுவையில் ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் மழை பெய்யக் கூடும்.

கடலோர ஆந்திரம், ராயலசீமை, கர்நாடகத்தின் தெற்கு உள்பகுதி, கேரளம் ஆகிய பகுதிகளிலும் சில இடங்களில் மழை பெய்யக் கூடும்.

ஆரணியில் 60 மில்லி மீட்டர் மழை:

மாநிலத்திலேயே அதிகபட்சமாக திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் 150 மில்லி மீட்டர் அளவுக்கு மழை கொட்டியது.

சென்னையில்... நகரில் புதன்கிழமை வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் இடி, மின்னலுடன் மழை பெய்யக் கூடும். பகலில் அதிகபட்ச வெப்பநிலை 74 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு இருக்கும். நகரில் செவ்வாய்க்கிழமை காலையில் நுங்கம்பாக்கம், மயிலாப்பூர், அடையாறு, கிண்டி உள்ளிட்ட இடங்களில் விட்டு, விட்டு மழை பெய்தது.

தினமலர்

**சென்னையில் பூவிறால் மீனுக்கு கூடுகிறது மவுசு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2010,00:43 IST

துரைப்பாக்கம் : ஏரிகளில் பிடிக்கப்படும் மருத்துவ குணம் வாய்ந்த பூவிறால் மீன்கள், சென்னை நகர் மக்களிடம் அமோக வரவேற்பு பெற்று வருகிறது.கடல் மீன்களான மஞ்சல் பாறை, வால்பாறை, வாளமீன், வஞ்சரம் போன்ற மீன்கள் சென்னை நகரில் அதிகளவில் விற்பனை செய்யப்படுகின்றன. அவற்றின் விலையும் அதிகம். ஆனால், ஏரி மீன்களுக்கு அசைவ பிரியர்களிடம் எப்போதும் தனி மவுசு.

சமீப காலமாக வீராணம் உள்ளிட்ட பல ஏரிகளில் பூவிறால் என்ற வகை மீன்கள் அதிகளவில் கிடைக்கின்றன. ஏரிகளில் பிடிக்கப்பட்டு, சென்னையின் பல்வேறு பகுதிகளில் இந்த வகை மீன்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. உடல் சூட்டை தணிப்பது உள்ளிட்ட மருத்துவ குணம் கொண்ட இந்த வகை மீன்கள் ஞாயிற்றுக் கிழமை மட்டும் விற்பனைக்கு வருகிறது. கிலோ 100 ரூபாய்க்கு மட்டுமே விற்பனை செய்யப்படும் பூவிறால் மீன்கள் முள் குறைந்தும், சதைகள் அதிகமாகவும் காணப்படும். ருசித்து சாப்பிடும் வகையில் அதன் சதைகள் உள்ளதால், பூவிறால் மீன்கள் சமீபகாலமாக மக்களிடம் அதிக வரவேற்பை பெற்றுள்ளது.

**விரைவில் துவங்கும் புதிய மஞ்சள் வரத்து**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2010,01:31 IST

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு இன்னும் 40 நாட்களில் மைசூர் ரகம், 8 நெம்பர் மஞ்சள் ஆகியவை புதிய மஞ்சள் வரத்து துவங்கவுள்ளது.மஞ்சள் உற்பத்தியில் இந்தியா முன்னணி நாடாகத் திகழ்கிறது. இந்தியாவில் ஆண்டுதோறும் 185.32 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் 701.66 லட்சம் டன் மஞ்சள் உற்பத்தியாகிறது. தமிழகத்தில் ஆண்டுதோறும் 33 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் 158.64 லட்சம் டன் மஞ்சள் உற்பத்தியாகிறது. தமிழகத்தில் மற்ற மாவட்டங்களை காட்டிலும் ஈரோடு மாவட்டம் மஞ்சள் உற்பத்தியில் முன்னணி மாவட்டமாக திகழ்கிறது.

ஈரோடு மாவட்டம் என்றாலே அனைவருக்கும் முதலில் ஞாபகத்துக்கு வருவது மஞ்சள் ஒன்றே. மஞ்சள் சாகுபடியும், மஞ்சள் விற்பனையும் இங்கு அதிகம். ஈரோட்டில் உற்பத்தியாகும் மஞ்சள் 85 சதவீதம்

உணவுக்காக பயன்படுகிறது. மருந்து, பெயின்ட், நறுமணப் பொருள், அழகுசாதனப் பொருட்கள் தயாரிக்க, 15 சதவீதம் மஞ்சள் பயன்படுகிறது. ஈரோட்டில் ஒழுங்கு முறை விற்பனை மையம், ஈரோடு கூட்டுறவு சொசைட்டி, கோபி கூட்டுறவு சொசைட்டி, வெளி மார்க்கெட் ஆகிய நான்கு சந்தைகள் உள்ளன. 205 தனியார் கமிஷன் மண்டிகளும், 135 தனியார் ஏற்றுமதி நிறுவனங்களும் செயல்படுகின்றன. மஞ்சள் மார்க்கெட்டுக்கு ஈரோடு மாவட்டத்தில் இருந்து 60 சதவீத மஞ்சளும், திருவண்ணாமலை, சேலம், தர்மபுரி, வேலூர் மற்றும் கர்நாடகா பகுதியில் இருந்து 40 சதவீதம் மஞ்சளும் வரத்தாகிறது.

ஈரோடு மாவட்டத்தில் மைசூரு சம்பா, எட்டாம் நம்பர், 10ம் நம்பர் உள்ளிட்ட மஞ்சள் ரகங்கள் அதிகளவில் பயிராகிறது. எட்டாம் நம்பர் மஞ்சள் டிசம்பர் மாதத்தில் அறுவடை துவங்கி ஜனவரி மாதத்தில் மார்க்கெட்டுக்கு வரத்தாகும்.சேலம், ஆத்தூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் கர்நாடகா பகுதியில் மைசூரு சம்பா, 10ம் நம்பர் ஆகிய ரகங்கள் பயிராகிறது. இந்த ரகம் ஃபிப்ரவரி, மார்ச் மாதத்தில் அறுவடைக்கு வரும். ஃபிப்ரவரி 15ம் தேதிக்கு பிறகே புதிய மஞ்சள் வரத்து அதிகரிக்கும்.

ஈரோடு மார்க்கெட்டில் வரலாறு காணாத வகையில் மஞ்சள் விலை உயர்ந்துள்ளது. சராசரியாக 15 ஆயிரம் ரூபாய்க்கு குறையாமல் விலை போகிறது.அதேவேளை மஞ்சள் சாகுபடி பரபரப்பளவும் அதிகரித்துள்ளது. நடப்பு சீஸனில் மஞ்சள் அதிகம் வரத்தானால், இதேவிலை கிடைக்குமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

ஈரோடு மஞ்சள் வணிகர்கள் மற்றும் கிடங்கு உரிமையாளர்கள் சங்கத் தலைவர் ரவிசங்கர் கூறியதாவது:ஈரோடு மாவட்ட மஞ்சளைத்தான் வெளி மாநிலங்கள் அதிகளவில் நம்பியுள்ளன. டிசம்பர் 10ம் தேதி மார்க்கெட் நிலவரப்படி விரலி மஞ்சள் குவிண்டால் 16 ஆயிரத்து 500 ரூபாய், கிழங்கு மஞ்சள் 16 ஆயிரத்து 300 ரூபாய்க்கு விலைபோனது. தற்போது ஈரோடு மார்க்கெட்டுக்கு நாளொன்றுக்கு 2,000 மூட்டைகள் மட்டுமே வரத்தாகிறது. மஞ்சள் தேவை அதிகம் இருக்கும் வியாபாரிகள், விலை அதிகமாக கொடுத்து வாங்கிச் செல்கின்றனர். மஞ்சள் விலையை கணிக்க முடியாமல் உள்ளது.

ஜனவரி 15க்கு பிறகே புதிய ரகம் மஞ்சள் சீஸன் வரத்துவங்கும். ஆந்திராவில் நிஜாமாபாத் மார்க்கெட்டிலும் இதே தேதியில் புதிய மஞ்சள் வரத்தாகும். மைசூரு சன்ன ரகம், பெருவெட்டு ரகம் மற்றும் எட்டாம் நம்பர் ரகங்கள் அதிகளவில் நடப்பாண்டு அதிகம் வரும்.இவ்வாறு அவர் கூறினார்.

**ஆட்டுச்சந்தை அமைக்க விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2010,00:05 IST

பொங்கலூர் : பொங்கலூர் பகுதியில், விவசாயத்துக்கு அடுத்தபடியாக கால்நடை வளர்ப்பு தொழிலே பிரதானமாக உள்ளது. இங்குள்ள விவசாயிகள், கால்நடைகளை விற்பனை செய்ய, பல்லடம் அல்லது முத்தூர் சந்தைகளுக்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இச்சந்தைகள் நீண்ட தொலைவில் அமைந்துள்ள தால், விவசாயிகள் செல்ல விரும்புவதில்லை. கால்நடைகளை குறைந்த விலைக்கு இடைத் தரகர்களிடம் விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. அவர்கள் கூடுதல் லாபம் வைத்து சந்தையில், வியாபாரிகளிடம் விற்பனை செய் கின்றனர்.

பொங்கலூர் பகுதியில், காய்கறி விற்பனை செய்ய வாரச்சந்தை செயல்படுகிறது. அதேபோல் கால்நடைகளுக்கும் வாரச்சந்தை அமைத்தால் விவசாயிகளுக்கு மிகவும் உபயோக மாக இருக்கும். விவசாயிகள் கூறுகையில், "பல்லடம், முத் தூருக்கு இடையில் ஆட்டுச்சந்தை அமைந்தால், இப்பகுதி விவசாயிகள் மிகுந்த பயனடைவர். பொங்கலூர் மருதுறையான்வலசில் செயல்படும் கோழிச்சந்தையை விரிவுபடுத்தி, ஆட்டுச்சந்தை அமைக்கலாம். இது, திருப்பூருக்கு அருகில் அமைந்துள்ளதால், பல வியாபாரிகள் நேரிடையாக வந்து வாங்கிச் செல்வர். இடைத்தரகர்களுக்கு செல்லும் பணம் விவசாயிகளை சென்றடையும். சந்தை அமைக்க போதுமான இட வசதியும் உள்ளது. சந்தையை ஏலம் விடுவதன் மூலம் ஊராட்சிக்கும் வருவாய் கிடைக்கும்,' என்றனர்.

**அரவக்குறிச்சி யூனியனில் பயிர் சாகுபடி அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2010,00:46 IST

கரூர்: அரவக்குறிச்சி யூனியன் பகுதியில் ரபி பருவத்தை முன்னிட்டு கடலை சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்.
வேளாண்மை உதவி இயக்குனர் கந்தசாமி கூறியதாவது: அரவக்குறிச்சி ஒன்றிய பகுதியில் ரபி பருவத்தை முன்னிட்டு 218 ஹெக்டேர் கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சமீபத்திய மழை காரணமாக, 1,000 ஹெக்டேராக சாகுபடி அதிகரிக்க வாய்ப்புள்ளது. தற்போது உளுந்து 250 ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. விரைவில் பயிரிடப்பட்டுள்ள பரப்பளவு இரட்டிப்பு ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. மக்கா சோளம் 330 ஹெக்டேரில் உள்ள சாகுபடியும், 700 ஹெக்டேராக

அதிகரிக்கும் நிலையுள்ளது. பருவமழையில், அரவை யூனியனில் ஒட்டுமொத்தமாக சாகுபடி கூடுதலாகும் வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**காடு வளர்ப்பு திட்டத்தில் 6.5 லட்சம் கன்றுகள் நடவு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2010,01:53 IST

சேலம்: சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டத்தின் கீழ், 6.5 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டது. தமிழகத்தில் 33 சதவீதமாக இருக்க வேண்டிய வனப்பகுதி, 22 சதவீதம் தான் உள்ளது. தற்போது தமிழகம் முழுவதும் வன அபிவிருத்தி பணிகள் மும்முரமாக நடப்பதால், பல்வேறு மாவட்டங்களில் வனப்பகுதிகள் கணிசமாக உயர்ந்து வருகிறது. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள வன பரப்புகள் குறித்து, செயற்கை கோள் மூலம் "பாரஸ்ட் சர்வீஸ் ஆஃப் இந்தியா' என்ற அமைப்பு கண்காணித்து வருகிறது.

இக்குழு அளித்த அறிக்கையின்படி 2009ல் தமிழகத்தில் 28 சதுர கிலோமீட்டர் வன பகுதி அதிகரித்துள்ளது. தமிழகத்தில் வன பரப்பளவு தற்போது 22.87 லட்சம் ஹெக்டேராக உள்ளது. சேலம் மாவட்டத்தில் வனத்துறை பொறுப்பில் உள்ள காட்டின் பரப்பு ஒரு லட்சத்து 24 ஆயிரத்து 571.41 ஹெக்டேர். சேலம் மாவட்டத்தில் உள்ள 185 இடங்களையும் உள்ளடக்கி, சேலம் வனத்துறையின் கீழ் 24 சதவீத பரப்பு மட்டுமே உள்ளது.

சேலம் மாவட்டத்தில் கடந்த 60 ஆண்டுகளில் 4 சதவீத வனப்பகுதி மட்டுமே உயர்ந்துள்ளது. தமிழகம் முழுவதும் வனப்பரப்பை அதிகரிக்க, தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி விவசாயிகளின் விருப்பப்படி, அவர்களது நிலங்களில் தேக்கு, சவுக்கு, சந்தனம் உள்ளிட்ட மரங்களை வளர்க்க இலவசமாக கன்றுகளை வழங்க அரசு உத்தரவிட்டது. சேலம் மாவட்டத்தில் கடந்த 2007ல் 4 லட்சம் மரக் கன்றுகளும், 2008ல் 3 லட்சமும், 2009ல் 6.50 லட்சம் மரக்கன்றுகள் தனியார் நிலங்களில் நடப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் 2010ம் ஆண்டில் 6.50 லட்சம் மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. நடப்பு ஆண்டுக்கான 6.50 லட்சம் மரங்கன்றுகள் என்ற இலக்கை எட்டி மாவட்ட வனத்துறை சாதனை செய்தது. இதுகுறித்து வன அதிகாரிகள் கூறுகையில், "காடு வளர்ப்பு திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டத்தில் 6.5 லட்சம் மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

மரக்கன்றுகளை விவசாயிகள் முறையாக பராமரித்தால், சேலம் மாவட்ட வனப்பகுதி 24ல் இருந்து 28 சதவீதமாக உயர வாய்ப்புள்ளது' என்றனர்.

**மழையால் செழித்துள்ள மானாவாரி உளுந்துபயிர்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 14,2010,22:33 IST

தியாகதுருகம் : தியாகதுருகம் பகுதியில் சாகுபடி செய்த உளுந்து பயிர்கள் பரவலாக பெய்த மழையால் செழித்து வளர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தியாகதுருகம் பகுதியில் 7,000 ஏக்கர் பரப்பில் மானாவாரியில் உளுந்து சாகுபடி செய்யப்பட்டுள் ளது. கடந்த அக். , மாதம் இறுதியில் பெய்த மழை ஈரத்தை கொண்டு உளுந்து பயிரிடப்பட்டது. அதைத்தொடர்ந்து பருவமழை தீவிரமாகி பரவலாக பெய்ததால் செடிகள் நன்கு செழித்து வளர்ந்தன.

பயிருக்கு களைபறித்து ஊட்டசத்து உரங்களை விவசாயிகள் தூவினர். இதனால் உளுந்து செடிகள் செழித்து வளர்ந்து தற்போது பூக்கும் தருவாயில் உள்ளன. பூச்சி தாக்குதலில் இருந்து பாதுகாக்க மருந்துகளை தெளிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். கடந்த ஆண்டை விட உளுந்து பயிரில் கூடுதல் பலன் கிடைக்கும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். இந்த ஆண்டு உளுந்து மூட்டை 5,000 ரூபாய்க்கு மேல் விற்பனையாகும் என்ற எதிர்பார்ப்பில் விவ சாயிகள் உள்ளனர். தற்போது உளுந்து பயிர் செழித்து வளர்ந்துள்ள தால் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு புத்தூட்டம் அளிக்க விஞ்ஞானிகள் ஆலோசனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 14,2010,21:52 IST

கடலூர் : வடகிழக்கு பருவ மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு புத்தூட்டம் அளிப்பது தொடர்பாக வேளாண் விஞ்ஞானிகள் ஆய்வு செய்து ஆலோசனை வழங்கினர். கடலூர் பகுதியில் பெய்த வடகிழக்கு பருவ மழையினால் பாதிக்கப்பட்ட பயிர்களை பார்வையிட்டு, அதற்கு புத்தூட்டம் அளிக்க விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்க கலெக்டர் உத்தரவிட்டார். அதன் பேரில் வட்டார வேளாண் உதவி இயக்குனர் இளவரசன், கரும்பு ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர்கள் ஜெயச்சந்திரன், ஆண்டனி ஜோசப், துரைசாமி, வேளாண் அலுவலர்கள் சின்னக்கண்ணு, விஜயலட்சுமி, ராஜலட்சுமி ஆகியோர் கொண்ட குழுவினர் தூக்கணாம்பாக்கம், பள்ளிப்பட்டு, கரைமேடு, பில்லாலி, குணமங்கலம், வரக்கால்பட்டு, சி. என். பாளையம், நடுவீரப்பட்டு, வானமாதேவி, பெத்தாங்குப்பம், திருவந்திபுரம்,

ஓட்டேரி, சான்றோர்பாளையம் உள்ளிட்ட கிராமங்களில் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

அதில், மழையால் ஊட்டச் சத்து குறைபாடு உள்ள நெற்பயிர்களுக்கு ஏக்கருக்கு 42 கிலோ அம்மோனியம் சல்பேட்டுடன் பொட்டாஷ் உரம் 17 கிலோ கலந்து இட வேண்டும். அல்லது பொட்டாஷ் உரத்துடன் 22 கிலோ யூரியா, 16 கிலோ ஜிப்சம் கலந்து மேலுரமாக இட விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினர். மேலும், இலை சுருட்டுப் புழு தாக்குதல் இருக்கும் நெற்பயிர்களுக்கு "புரெபனோபாஸ் 2 மிலி. , மற்றும் அசடிராக்டின் 1 மிலி. , ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இலை உறை அழுகல் நோய் ஆரம்ப நிலையில் உள்ள பயிர்களுக்கு ஏக்கருக்கு சூடோமோனாஸ் ஒரு கிலோவை மக்கிய தொழு உரத்துடன் கலந்து இட வேண்டும். அதேப் போன்று இலை உறை மற்றும் கதிர் உறை அழுகல் நோய் பாதிப்பு உள்ள பயிர்களுக்கு ஏக்கருக்கு 100 கிராம் "கார்பண்டிசம்' மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க ஆலோசனை வழங்கினர்.

**2,500 ஏக்கர் பரப்பளவில் உளுந்து பயறு சாகுபடி: விவசாயிகளுக்கு ரூ. 54 லட்சம் மானியம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 14,2010,22:22 IST

விழுப்புரம் : துரிதப்படுத்தப்பட்ட பயறுவகை உற்பத்தி திட்டத்தின் கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் 2,500 ஏக்கர் பரப்பில் உளுந்து சாகுபடி செய்யப்படுகிறது. இதற்காக வேளாண் துறை மூலம் விவசாயிகளுக்கு 54 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவில் ரியல் எஸ்டேட், தொழிற்சாலை பெருக்கம் உட்பட பல்வேறு காரணங்களால் விவசாய நிலங்களின் பரப்பு கணிசமான அளவு குறைந்துள்ளது. இதனால் உணவு உற்பத்தி குறைந்து மக்கள் தொகைக்கு ஏற்ப தேவை அதிகரித்து வருகிறது. குறிப்பாக குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைத்து தரப்பினருக்கும் பயன்படும் உளுந்து உள்ளிட்ட பயறு வகை பற்றாக்குறை அதிகரித்துள்ளது. இதனால் வளரும் குழந்தைகளுக்கு போதிய ஊட்டச் சத்துகள் கிடைப்பது குறைந்து நோய்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

எனவே பயறு வகை உற்பத்தியை பெருக்க மத்திய, மாநில அரசுகள் இணைந்து பல்வேறு விவசாய பெருக்குத் திட்டங்களை செய்து வருகின்றன. அதன் ஒரு பகுதியாக தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயறு உற்பத்தியை பெருக்க "துரிதப்படுத்தப்பட்ட பயறுவகை உற்பத்தி திட்டம்' மூலம் விவசாயிகளுக்கு விதை மற்றும் உரங்கள் உட்பட அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகிறது. அறுவடைக்கு பின் நல்ல விலைக்கும் விற்பனை செய்யவும், இத்திட்டம் மூலம் வேளாண் துறை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விழுப்புரம் மாவட்ட வேளாண் துறை மூலம் இத்திட்டத்தின் கீழ் திருநாவலூர் மற்றும் உளுந்தூர்பேட்டை வட்டாரப் பகுதிகளில் 2,500 ஏக்கர் பரப்பளவில் உளுந்து

விதைப்பு செய்யப்பட்டுள்ளது.  இதற்காக மத்திய, மாநில அரசுகள் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேளாண் துறை மூலம் விவசாயிகளுக்கு தேவையான விதை மானிய விலையில் வழங்கப்பட்டது. விதைப்பு செய்தவுடன் அதற்கு தேவையான உரம், டி. ஏ. பி. , பொட்டாஷ், இனக்கவர்ச்சி பொறி, வேம்பு பூச்சிக்கொல்லி, பாஸ்போ பாக்டீரியா, ரைபோசோம், நுண்ணூட்ட உரம் மற்றும் பயிர் வளர்ச்சி ஊக்கிகள் உள்ளிட்ட 54 லட்சம் மதிப்பிலான விவசாய பொருட்கள் வழங்கப்படுகிறது.  இதற்காக ஏக்கருக்கு 2,200 ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்படுகின்றன.

மேலும் அறுவடை காலத்தில் "டாடா ராலிஸ் இந்தியா' என்ற நிறுவனம்  மற்றும் கூட்டுறவு மையங்களும் நேரடியாக வயலுக்கு வந்து அறுவடை செய்யப்பட்ட உளுந்து பயறுகளை நல்ல விலைக்கு கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்துள்ளனர்.  வழக்கமான முறையில் விவசாயிகள் சாகுபடி செய்யும் உளுந்து ஏக்கருக்கு 3 முதல் 4 மூட்டைகள் (குவிண்டால்) மட்டுமே மகசூல் கிடைக்கும்.  ஆனால் துரிதப்படுத்தப்பட்ட பயறுவகை உற்பத்தி திட்டத்தின் கீழ் ஏக்கருக்கு 9 முதல் 10 மூட்டைகள் உளுந்து மகசூல் கிடைக்கிறது.    இதனால் இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் அதிக பயன் பெறுகின்றனர் என விழுப்புரம் வேளாண்மை இணை இயக்குனர் ராமகிருஷ்ணன் தெரிவித்தார்.  இத்திட்டம் முழுமையடையும் போது இந்த பருவத்தில் 2,500 டன் உளுந்து பயறு மாவட்டத்தில் கூடுதலாக உற்பத்தி செய்யப்படும்.  இதன் மூலம் மாவட்ட மக்களின் பயறு தேவை முழுமையாக தன்னிறைவு பெறும் நிலை உருவாகும்.

மழை சேத நிவாரண உதவி ரூ.  1.  கோடியே 77. 5 லட்சம் : விழுப்புரம் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்த கன மழையினால் வேளாண் பயிர்கள் பல இடங்களில் சேதமடைந்துள்ளன.  கோலியனூர், விக்கிரவாண்டி, வானூர், காணை, செஞ்சி, முகையூர், வல்லம், மரக்காணம், மயிலம், மேல்மலையனூர், திருவெண்ணெய்நல்லூர் மற்றும் ஒலக்கூர் ஆகிய 12 ஒன்றியங்களில் பயிர் சேதம் ஏற்பட்டுள்ளது.  இதில் 5,568 ஏக்கர் நெல், 40 ஏக்கர் மக்காச்சோளம், 150 ஏக்கர் பயறு வகைகள், 20 ஏக்கர் மணிலா, 18 ஏக்கர் சூரியகாந்தி உட்பட மொத்தம் 5,796 ஏக்கர் பரப்பளவில் பயிர் சேதம் ஏற்பட்டுள்ளது.  நெல் பயிர் பாதிப்பிற்கு ஏக்கருக்கு 3,200 ரூபாயும், மற்ற பயிர்களுக்கு ஏக்கருக்கு 1,600 ரூபாயும் இழப்பீட்டு தொகை வழங்கப்பட உள்ளன.  இதன் மூலம் மாவட்ட விவசாயிகளுக்கு வெள்ள சேதமாக ஒரு கோடியே 77 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய் உதவி தொகை வழங்கப்படுகின்றது.

**நிலக்கடலைவரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 14,2010,01:20 IST

வெள்ளகோவில்:தொடர் மழை நின்றதையடுத்து, வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று நடந்த ஏலத்துக்கு அதிகளவு நிலக்கடலை வரத்து இருந்தது.சின்ன தாராபுரம், லக்கமநாயக்கன்பட்டி, ஒத்தமாந்துறை பகுதிகளை சேர்ந்த ஏழு விவசாயிகள் 42 மூட்டை நிலக்கடலை ஏலத்துக்கு கொண்டு வந்தனர்; கடந்த வாரத்தை விட, 22 மூட்டை அதிகம்.முதல் தரம் 38 ரூபாய், இரண்டாம் தரம் 33 ரூபாய் என விலை நிர்ணயம் செய்து, வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். மொத்தம் 57 ஆயிரத்து 691 ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.

**மதுரையில் 3 இடங்களில் தலா ரூ. 69 லட்சம் மதிப்பில் வேளாண் வணிக மையங்கள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 14,2010,23:24 IST

மதுரை : மதுரை மாவட்டத்தில் கொக்குளம், கோட்டைப்பட்டி, அவனியாபுரத்தில் தலா 69 லட்சம் ரூபாய் மதிப்பில் வேளாண் வணிக மையங்கள் அமைய உள்ளன.மதுரையில் வேளாண் வணிகத்துறை சார்பில் நீர்வள, நிலவளத் திட்டம், மேல்குண்டாறு, கிருதுமால் நதி உபவடி நிலப்பகுதி விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண் விற்பனை வாரிய மாநில தலைவர் கே.பி.டி.கணேசன் முன்னிலை வகித்தார். கலெக்டர் காமராஜ் தலைமை வகித்து பயிற்சியை துவக்கினார்.

அவர் பேசியதாவது: மதுரை மாவட்டத்தில் உலக வங்கி நிதியுதவியுடன் நீர்வள, நிலவள திட்டத்தில் எட்டு துறைகளை ஒருங்கிணைத்து திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் கொக்குளம், எஸ்.கோட்டைப்பட்டி, அவனியாபுரத்தில் தலா 69 லட்சம் ரூபாய் மதிப்பில் வேளாண் வணிக மையங்கள் அமைய உள்ளன. இங்கு விவசாயிகள் தங்கள் விளைபொருளை தரம்பிரித்து, இடைத்தரகர் இன்றி விற்பனை செய்யலாம். இதற்காக சேமிப்பு கிடங்கு, உலர்களம், தகவல் தொழில்நுட்ப அறை, கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக் எடைமேடை வசதி ஏற்படுத்தப்படும்.கீழக்குயில்குடி, தும்பக்குளம், பூச்சம்பட்டி, சாப்டூர் குடிசேரியில் தலா 7.9 லட்சம் ரூபாய் மதிப்பில் விளைபொருள் சேகரிப்பு மையங்கள் அமைக்கப்படும். மேல்திருமாணிக்கத்தில் 2.75 லட்சம் மதிப்பில் உலர்களம் இம்மாதம் திறக்கப்படும்.

உசிலம்பட்டி, திருமங்கலம், வாடிப்பட்டி, மேலூர், டி.கல்லுப்பட்டி, மாட்டுத்தாவணியில் ஒழுங்குமுறை விற்பனை கூடம் உள்ளது. நெல், சிறுதானியம், மிளகாய்வத்தல், எண்ணெய் வித்துக்களை இருப்பு வைக்கலாம். அதற்கு ஒரு லட்சம் ரூபாய் வரை கடன் பெறலாம். முதல் 15 நாட்களுக்கு வாடகை

கட்டணம் கிடையாது. ஐந்து மாதங்கள் வரை இருப்பு வைக்கலாம். இவ்வாறு அவர் பேசினார்.நிகழ்ச்சியில் மதுரை விற்பனை குழுத் தலைவர் கணேசன், இணைஇயக்குனர் சங்கரலிங்கம், விவசாய கல்லூரி பேராசிரியர் மணிசேகரன், விற்பனை குழு செயலாளர் பாஸ்கரராஜ் கலந்து கொண்டனர்.

**சளியைக் குணப்படுத்தும் வாசனை பொருட்கள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2010,00:00 IST



**மஞ்சள்:** விரலிமஞ்சள் ஒன்றை எடுத்து அதன் நுனிபாகத்தை நெருப்பில் சுட்டு அதிலிருந்து வரும் புகையை மூக்கினால் நுகர்ந்துவர சளித்தொல்லை முற்றிலும் குணமாகும். காலையில் ஒரு முறையும், இரவில் படுக்கைக்குப் போகும் முன் ஒருமுறையும் இவ்வாறு நுகர வேண்டும். இதனை இயற்கை இன்ஹேலர் என்று சொல்லலாம். இரவில் படுக்கைக்கு போகும் முன்னர் ஒரு டம்ளர் காய்ச்சிய பசும்பாலில் சிறிது மஞ்சள்தூள், பொடித்த பனங்கற்கண்டு கலந்து பருகிவர சளி நன்கு பழுத்து கபம் வெளிப்பட்டு நலன் பயக்கும்.

**மிளகு:** மிளகுத்தூளை தீக்கனலில் தூவி வரும் புகையை மெல்ல நுகர்ந்துவர சளித்தொல்லை குணமாகும். தினம் இரவில் மட்டும் இதைக் கடைபிடிக்க வேண்டும். சூடான சாதத்தில் மிளகு ரசம் தயாரித்து சேர்த்து சாப்பிட்டு வந்தால் சளித்தொல்லை போய்விடும். இப்படி சாப்பிடும்போது சாதத்தில் தயிர் ஊற்றி உண்பதைத் தவிர்க்க வேண்டும்.

**சுக்கு:** சுக்குக்கு மிஞ்சிய மருந்தில்லை என்ற பழமொழிக்கு ஏற்ப சுக்கு சளியை ஓட்டும். போதிய அளவு நீரில் சிறிது சுக்கைப் பொடித்து போட்டு, கருப்பட்டி சேர்த்து, சுக்குநீர் கொதிக்கவைத்து இறக்கிவைத்து,

அதைச் சுடச்சுட குடித்துவர சளித்தொல்லை நீங்கும். இது ஒரு எளிய இயற்கை மருந்தாகும். சுக்கைத் தூளாக்கி சூடான சாதத்தில் சேர்த்து சிறிது நல்லெண்ணெயும் சேர்த்து சாப்பிட்டுவர சளி குணமாகும்.

**நவீனதொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2010,00:00 IST



**அடர்நடவு முறை:** இந்தியாவில் இம்முறை முதல்முதலில் மாமரத்தில் மேற்கொள்ளப்பட்டது. அம்ராபாலி என்ற குட்டைவகை மாமர ரகத்தில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் முக்கிய பரிந்துரையாக 5 மீட்டருக்கு 5 மீட்டர் இடைவெளியில் எக்டருக்கு 400 மாமரங்கள் நடுவதற்கான பரிந்துரை தரப்பட்டது. இதன்மூலம் விளைச்சல் 3 முதல் 4 மடங்கு அதிகரிக்க வாய்ப்புள்ளது. ஆனால் ஆரம்பகட்டச்செலவு வழக்கமான மாமர நடவு முறையை ஒப்பிடும் போது சுமார் 4 மடங்கு அதிகமாக இருந்தது.

அடர்நடவு முறைக்கு எல்லா ரகங்களும் ஏற்றவை. அடர் நடவுக்கு நல்ல வளமான வடிகால் வசதியுள்ள நிலங்களைத் தேர்வு செய்ய வேண்டும். மண்ணின் கார அமிலத் தன்மை 6.5 முதல் 7.5 வரை இருப்பது மாமரங்களின் வளர்ச்சிக்கு ஏதுவாக அமையும். நடவுக்கு முன் 5து5 மீட்டர் இடைவெளியில் 1 கன அடி அளவில் குழிகள் எடுத்து சில வாரங்களுக்கு பின் மேல் மண்ணை இட்டு நிரப்பி, 10 கிலோ தொழு உரம், 100 கிராம் லிண்டேன் கலந்து குழியை மூடவேண்டும். நடவுக்காக மென் தண்டு ஒட்டுக்களையோ அல்லது நெருக்கு ஒட்டு கன்றுகளையோ பயன்படுத்தலாம். இளம் வயதான ஒட்டு கன்றுகளைத் தவிர்ப்பது அவசியம். தயார் செய்யப்பட்ட குழிகளில் நடும்போது ஒட்டுப்பகுதி மண்ணிற்கு மேல் சுமார் 10-15 செ.மீ. அளவு இருக்குமாறு நடவேண்டும்.

**பாசனமும் உரமும்:** அடர்நடவு முறையைப் பின்பற்றும்போது சொட்டுநீர்ப்பாசனமும், நீர்வழி உரமிடுதலும் மிகவும் அவசியம். முதல் 2 வருடங்களுக்கு 2.5 லிட்டர்/மரம் என்ற அளவில் நீர் கிடைக்குமாறு செய்ய வேண்டும். பின்னர் 2-4 வருட மரத்திற்கு 10-25 லி/மரம் என்ற அளவிலும், 5-10 வருட மரத்திற்கு 10 கிலோ தொழு உரம், 200 கிராம் தழைச்சத்து, 300 கிராம் மணிச்சத்து, 300 கிராம் சாம்பல்சத்து ஆகியவற்றை வருடத்திற்கு இருமுறை சமமாக பிரித்து அளித்தல் வேண்டும். மேலும் ஒவ்வொரு வருடமும் 10 கிலோ தொழு உரம், 200 கிராம் தழைச்சத்து, 200 கிராம் மணிச்சத்து, 300 கிராம் சாம்பல்சத்து என்ற அளவில் அதிகரித்துக் கொண்டே வரவேண்டும். 6 வயது மரத்திற்கு 50 கிலோ தொழு உரம், 1 கிலோ தழைச்சத்து, 1 கிலோ மணிச்சத்து, 1.5 கிலோ சாம்பல்சத்து இடவேண்டும்.

**வடிவமைப்பும், கவாத்தும்:** நட்ட கன்றுகளை 1 மீட்டர் உயரம் வரை நேராக வளர்த்து 70 செ.மீ. உயரத்தில் நுனிகளை வெட்டிவிடுவதன் மூலம் கிளைகள் நாலாபக்கமும் உருவாகும். இதில் 3 அல்லது 4 திடகாத்திரமான எல்லா திசைகளிலும் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அதோடு ஏனைய கிளைகளை அகற்றிவிட வேண்டும். பின்னர் அக்கிளைகளை 1 மீட்டர் நீளம்வரை வளர்த்து 60 செ.மீ. உயரத்தில் மீண்டும் நுனியிலிருந்து வெட்டிவிடுதல் அவசியம். இவ்வாறு கவாத்து செய்யப்பட்ட மரங்கள் குடையைப் போன்று காணப்படும். காய்ப்புக்கு வரும்போது கவாத்து செய்தல் அவசியம். நுனி கிளைக்கலைப்பு, தேவையற்ற மரத்தின் நடுப்பகுதியில் தோன்றும் கிளைகளையும், மேல்நோக்கி வளரும் நடுத்தண்டுகளையும் அகற்றி தேவையான அளவு சூரிய ஒளி படும்படி செய்வதால் அதிக விளைச்சலைப் பெறலாம்.

**பூச்சி நோய் மேலாண்மை:** தத்துப் பூச்சிகளை அசிபேட், பாசலோன், கார்பரில் போன்ற பூச்சிமருந்துகளைப் பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம். கார்பரில் பயன் படுத்தும்போது அதனோடு நனையும் கந்தகம் பயன்படுத்துதல் அவசியம். தண்டு துளைப்பானைக் கட்டுப் படுத்த வண்டுகள் துளைத்த துளைகளில் 3-5 கிராம் கார்போபியூரானை இட்டு களிமண் கொண்டு மூடிவிடலாம். பழ ஈயைக் கட்டுப்படுத்த இனக்கவர்ச்சிப் பொறிகளைப் பயன்படுத்தலாம் அல்லது மாலத்தியான், பெந்தியான் போன்ற ரசாயன பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தலாம். பழங்களில் தோன்றும் பறவைக் கண் நோயைக் கட்டுப்படுத்த கார்பன்டசிம், மேங்கோசெப் போன்ற பூஞ்சாணக் கொல்லிகளைப் பயன்படுத்தலாம்.

**அறுவடை:** நல்ல பராமரிப்பு இருந்தால் 3 வருடங்களில் காய்க்கத் தொடங்கும். 3ம் வருடத்தில் ஒரு எக்டருக்கு சுமார் 1-2 டன் விளைச்சல் கிடைக்கும். 4வது வருடம் 2-4 டன் விளைச்சலும், 5வது வருடம் 6-8 டன் வரையும், 6 வது வருடத்திலிருந்து 10-12 டன் விளைச்சலும் பெறலாம்.**(தகவல்: தா.நா.பாலமோகன், சா.ராஜதுரை, கோ.பிரியதர்ஷினி, பழத்துறை, தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்-641 003)**.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2010,00:00 IST

**ஊடுபயிர்களில் அதிக பணம் தருவது கோ-கோ:** வளர்ந்த தென்னை, பாக்கு, பாமாயில் தோட்டங்களில் ஊடுபயிர் செய்ய ஏற்றது. ஆண்டுதோறும் அதிக பணம் தருவது கோ-கோ வாகும். நட்ட 3 ஆண்டு முதல் 30 ஆண்டு வரை பலன் தரும். ஏக்கருக்கு நிகர லாபம் ரூ.24,000/-. அரசு மானியம் எக்டருக்கு ரூ.11,250/-. மேலும் விபரங்களுக்கு: **இலவச தொலைபேசி எண்: 1800 103 5303. தொலைபேசி எண்: 04253-281 081. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கேட்பரி இந்தியா லிமிடெட், சென்னக்கல்பாளையம், தலைவாய்ப்பட்டினம், தாராபுரம் தாலுகா-638 672.**

**கிருஷிகேர் பயோ இன்புட்ஸ்:** அனைத்து பயிர்களுக்கும் ஏற்ற இயற்கை இடுபொருட்கள் - நுண்ணுயிர் உரங்கள், நுண்ணுயிர் நோய் தடுப்பான்கள், நுண்ணுயிர் பூச்சிக்கொல்லிகள், திறன்மிகு நுண்ணுயிர்கள் (இஎம்), மக்கவைக்கும் நுண்ணுயிர்கள், பேக்டீரியா மற்றும் பூஞ்சானம்; வேம்-மைக்கோரைசா வேர் உட்பூசணம், அங்கக உரங்கள், மண்புழு உரம், வேம்பு தயாரிப்புகள் இவை அனைத்தும் கிடைக்கும் இடம்: ""கிருஷிகேர் பயோ இன்புட்ஸ், 24/5, முதல் குறுக்கு, கற்பக விநாயகர் தெரு, புதிய பஸ் ஸ்டாண்ட் எதிரில், முசிறி-621 211. போன்: 04326-263 115. -டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

**ஓசூரில் மணக்கும் ரோஜா ஏற்றுமதி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2010,00:00 IST



இன்று ஓசூர் பகுதியில் நிலவிவரும் சூழ்நிலையை கவனிக்கும் போது ரோஜா உற்பத்தியாளர்கள் மிகவும் உற்சாகமாக இருப்பதோடு ஓசூரின் பெருமையை அதிகப்படுத்த ஒரு இலக்கினை நிர்ணயித்துக் கொண்டு அந்த அளவிற்கு ரோஜா மலர்களை ஏற்றுமதி செய்ய துடிதுடித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஓசூரில் இருந்து கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டினை ஒட்டி "ஒரு கோடி ரோஜா மலர்கள்' ஏற்றுமதி செய்ய மலர் உற்பத்தியாளர்கள் இலக்கு நிர்ணயித்துள்ளனர். தற்போது 20 பூக்கள் கொண்ட ஒரு கட்டு ரோஜா 70 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றது. டிசம்பர் மாதத்தில் ரூ.150 முதல் ரூ.200 வரை விலை உயர வாய்ப்புள்ளது.

**ரோஜா சாகுபடியில் முழு வீச்சில் ஈடுபாடு:** ரோஜா மலர்கள் வருடம் பூராவும் ஏற்றுமதி செய்யப்பட்டாலும் கிறிஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் காதலர் தினம் போன்ற விசேஷ நாட்களில் மிக அதிக அளவில் ஏற்றுமதி செய்யப் படுகின்றன. தற்போது ரோஜா சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்க மத்திய, மாநில அரசுகளின் தோட்டக்கலைத்துறை பல வழிகளில் உதவிசெய்து ஊக்குவித்து வருகின்றது. ஓசூர் செய்துவரும் ரோஜா ஏற்றுமதிக்கு நல்ல பெயரை வாங்கித்தருவது டான்ப்ளோராவாகும். இது ஆண்டு முழுவதும் மிகப்பெரிய அளவில் பூக்களை தற்போது ஏற்றுமதி செய்து வருகின்றது. கிறிஸ்துமஸ், புத்தாண்டை ஒட்டி ஓசூர், பேரிகை, பாகலூர், அமுதகொண்டபள்ளி, தேன்கனிக்கோட்டை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் விவசாய நிலங்களிலும் தனியார் நிலங்களிலும் நடத்திவரும் உற்பத்தி மையங்களிலும் ரோஜாமலர் உற்பத்தியில் தொழிலாளர்கள் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

விவசாயிகளுக்கு ஊக்கம் அளித்து உதவிடும் அரசு: தற்போது விவசாயிகளையும் (இதுவரை ரோஜாவை விட்டு இதர பயிர்களை சாகுபடி செய்து கொண்டு இருந்தவர்களை) அரசு ரோஜா சாகுபடியில் ஈடுபடச் செய்து உதவுகின்றது. இவர்கள் இதுவரை திறந்தவெளியில் ரோஜாவை சாகுபடி செய்துவந்தனர். ஆனால்  இதில் கிடைக்கும் மலர்களை ஏற்றுமதி செய்ய இயலாது. சிறு விவசாயிகளுக்கு 1000 சதுரமீட்டர் அளவுள்ள "பாலிஹவுசஸ்' என்னும் பசுமைக்குடில்களை மானியத்தில் அரசு வழங்கி அவர்களை ரோஜா மலர்கள் உற்பத்தியில் ஈடுபடச் செய்துள்ளனர். இந்த உதவியால் ஏற்கனவே ரோஜா சாகுபடியில் அனுபவம் பெற்றவர்கள் பசுமைக்குடில் சாகுபடியில் திறன் பெற்று தரமான மலர்களை தயார் செய்யும் நிலையை அடைந்துவிட்டனர். இதனால் சிறு விவசாயிகள் மூலமும் ஏற்றுமதிக்கேற்ற ரோஜாமலர்கள் உற்பத்தியாகின்றன.

**ஊக்கம் பெற்ற விவசாயியின் திறமை:** ஓசூரில் வி.மணி (சீரா புளூம்ஸ் பிரைவேட் லிமிடெட்) என்பவர் ரோஜா மலர்களை ஏற்றுமதி செய்கிறார். தற்போதுள்ள சூழ்நிலையில் மணி உற்சாகத்துடன் தனது மலர்களின் தரத்தை உயர்த்த முயற்சிகள் எடுத்துள்ளார். இவரது பசுமைக் குடில்களில் நட்டுள்ள ரோஜா செடிகளின் வயது 6-7 வருடங்கள் ஆகின்றன. இந்த காலத்திற்கு பின் பழைய செடிகளை அகற்றி புதிய செடிகளை நடுவார்கள். ரோஜா செடிகளுக்கு 6 வருடங்களில் ரசாயன உரங்களே அதிகமாக அளிக்கப்படுகின்றன. இது திரவ ரூபத்தில் உரம் அளிக்கப்படுகின்றது. மண்ணின் வளத்தை கூட்டும் முயற்சியில் மணி ரோஜா வளரும் மண்ணினை எடுத்து விஞ்ஞான ரீதியில் பரிசோதித்துப் பார்த்ததில்

சுண்ணாம்பு, போரான், இரும்பு போன்ற சத்துக்கள் குறைவாக இருப்பதைக் கண்டறிந்து உடனே இந்த சத்துக்களை மண்ணிற்கு இட்டு மண்ணை செழிப்படையச் செய்துள்ளார். மணி இயற்கை விவசாயத்தில் ஆர்வம் உடையவர். இவர் தனது ரோஜா செடிகளுக்கு மண்புழு உரத்தினை இட்டார். இவர் ரசாயன உரங்களை 60 சதவீதத்திலும் இயற்கை உரங்களை 40 சதவீத அளவிலும் இட்டு வருகிறார். இம்மாதிரியான செயல் திறனால் மணி நல்ல தரமிக்க ரோஜா மலர்களை உற்பத்தி செய்து அவைகளை ஏற்றுமதி செய்து பயன் அடைவதோடு பெங்களூரு மற்றும் தமிழகத்தில் பல ஊர்களுக்கும் கொய்மலர்களை அனுப்பி பலன் அடைகிறார்.

கண்கவர் ரோஜா ரகங்கள்: வெளிநாட்டு மக்களை கவர கண்கவர் ரோஜாக்களை ஓசூரில் மலர் உற்பத்தியாளர்கள் சாகுபடி செய்கிறார்கள். அந்த ரகங்களின் பெயர்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன. நொப்ளஸ், ஜெப்ரா, ராவேல், ஸ்கைலைன், வொர்சீலியா, கான்பிட்டி, கோல்ட் ஸ்ட்ரோக், கார்வெட். மேலும் டான்ப்ளோரா நிறுவனம் "கோகினூர்' என்னும் கவர்ச்சிகர ரோஜா ரகத்தை "காதலர் தினத்தை'யொட்டி அறிமுகம் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய பெருமுயற்சி எடுத்து வருகின்றது. சென்றவருடம் இந்த நிறுவனம் "தாஜ்மகால்' என்ற ரகத்தை சாகுபடி செய்தபோது இதற்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு கிடைத்தது. இவ்வாறு இன்று ஓசூரில் என்றும் காணாத அளவிற்கு ரோஜா மலர்கள் ஏற்றுமதிக்கு பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது. நிச்சயமாக இந்த முயற்சிகள் இந்த வருடம் ரோஜா மலர்கள் ஏற்றுமதியை மேலும் பிரகாசமடையச் செய்யும் என்பதை திடமாக நம்பலாம்.**-எஸ்.எஸ்.நாகராஜன்.**

தினத் தந்தி

## *வெளிநாடுகளில் உற்பத்தி குறைவால் சோயா எண்ணெய் விலை உயர வாய்ப்பு*



சுதானுகா கோசல்

கொல்கத்தா

சோயா பீன் அதிக அளவில் உற்பத்தியாகும் இந்தோனேஷியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் அதிக மழைப்பொழிவால், இதன் உற்பத்தி குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் தென் அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள வறட்சியாலும் இதன் உற்பத்தி பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இதனால் சோயா எண்ணெய் விலை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உற்பத்தி

அதேசமயம் இந்தியாவில் சோயா உற்பத்தி மதிப்பீடுகளை ஒட்டியே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே உள்நாட்டில் இதன் விலை உயர வாய்ப்பில்லை என சன்வின் குழுமத்தின் தலைமைச் செயல் அதிகாரி சந்தீப் பஜோரியா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறும்போது, "சோயா பீன் பருவம் என்பது நம்நாட்டில் நவம்பர் 1–ந் தேதி முதல் அக்டோபர் 31–ந் தேதி வரை கணக்கிடப்படுகிறது. தற்போதைய நிலையில் உள்நாட்டில் 15 லட்சம் டன் சோயா எண்ணெய் உற்பத்தியாகிறது. சுமார் 16 லட்சம் டன் சோயா எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது. தற்போது சர்வதேச சந்தையில் ஒரு டன் சோயா எண்ணெய் விலை 1,280 டாலர் என்ற அளவில் உள்ளது. சர்வதேச நாடுகளில் உற்பத்தி குறையும் நிலையில் இதன் விலை டன்னுக்கு 50–100 டாலர் என்ற அளவிற்கு உயரக்கூடும்" என்று தெரிவித்தார்.

சோயா வித்துக்கள்

அண்மையில் முடிவுற்ற சோயா பருவத்தில் உள்நாட்டில் 89 லட்சம் டன் சோயா வித்துக்கள் உற்பத்தியாகி உள்ளது. வெளிநாடுகளில் உற்பத்தி குறைந்து உள்ள நிலையில், உள்நாட்டில் உற்பத்தி நன்கு உள்ளதால் இந்தியாவில் இதன் விலை உயர வாய்ப்பில்லை என மத்திய எண்ணெய் தொழில் மற்றும் வர்த்தக அமைப்பின் செயல் இயக்குனர் பி.கே. சர்தார் தெரிவித்தார்.

## ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தில் குங்குமப்பூ உற்பத்தி 12 டன்னாக குறையும்



*மசூத் உசைன் – மாத்வி சாலி*

*ஸ்ரீநகர் / சண்டிகார்*

*உலக அளவில் காஷ்மீர் குங்குமப்பூ மிகவும் புகழ் வாய்ந்ததாகும். காஷ்மீரில் பாம்பூர் பகுதியில் தான் குங்குமப்பூ அதிக அளவில் விளைகிறது. அண்மைக்காலமாக இப்பகுதியில் குங்குமப்பூ உற்பத்தி குறைந்து வருவதாக தெரிய வந்துள்ளது. இருப்பினும் ஈரான் நாட்டிலிருந்து மிக அதிக அளவில் குங்குமப்பூ இறக்குமதி ஆவதால் இதன் விலை உயராமல் உள்ளது என குங்குமப்பூ வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.*

*40 டன்*

*கடந்த 1990–ஆம் ஆண்டில் காஷ்மீர் பகுதிகளில் குங்குமப்பூ உற்பத்தி 40 டன் என்ற அளவில் இருந்தது. இது, படிப்படியாக குறைந்து தற்போது 12 டன்னாக சரிவடைந்துள்ளது. இருப்பினும், இதுகுறித்து நாம் அச்சம் கொள்ள தேவையில்லை என காஷ்மீரைச் சேர்ந்த குலாம் நபி தெரிவித்தார். ஏனெனில் கடந்த சில ஆண்டுகளாகவே குங்குமப்பூ உற்பத்தி நிலையாகவே உள்ளது. மோங்ரா என்ற இடத்தில் விளையும் குங்குமப்பூ மிகவும் தரம் வாய்ந்ததாகும். இங்கு விளையும் 10 கிராம் குங்குமப்பூ விலை ரூ.1,650 என்ற அளவில் உள்ளது. அதேசமயம் லட்சா வகை குங்குமப்பூவின் விலை (10 கிராம்) ரூ.1,150–1,200 என்ற அளவில் உள்ளது.*

*காஷ்மீர் பகுதிகளில் குங்குமப்பூ சாகுபடியை அதிகரிக்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதனையடுத்து முன்பு ஒரு ஹெக்டேரில் 2.20 கிலோ என்ற அளவில் இருந்த இதன் உற்பத்தி, தற்போது 2.50 கிலோவாக உயர்ந்துள்ளது என காஷ்மீரைச் சேர்ந்த விவசாயி ஒருவர் குறிப்பிட்டார்.*

*பயன்பாடு*

குங்குமப்பூ, மருந்து தயாரிப்பு, பான் மசாலா, வாசனை திரவியங்கள் மற்றும் இனிப்பு வகைகள் போன்றவற்றில் பயன்படுத்தப்படுகிறது. காஷ்மீர்–ஸ்ரீநகரில் பாம்பூர் மற்றும் அதனை சுற்றியுள்ள 226 கிராமங்களில் குங்குமப்பூ சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக, காஷ்மீர் பகுதிகளில் விளையும் குங்குமப்பூவிற்கு சர்வதேச அளவில் அதிக வரவேற்பு காணப்படுகிறது. ஏனெனில் இங்கு விளையும் குங்குமப்பூவில் அதிக சத்துக்கள் உள்ளதாக அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

இடர்பாடுகள்

காஷ்மீர் குங்குமப்பூவிற்கு அதிக வரவேற்பு உள்ளது என்றாலும் இது, அங்குள்ள பல விவசாயிகளுக்கு ஆதாயம் அளிப்பதாக இல்லை. இதனால் பல விவசாயிகள் குங்குமப்பூ விளைநிலங்களை மனைகளாக மாற்றி விற்பனை செய்து வருகின்றனர். இதே நிலை நீடித்தால் குங்குமப்பூ சாகுபடி செய்யும் பரப்பளவு குறையும் என ஆய்வாளர் ஒருவர் குறிப்பிட்டார். இந்தநிலையில் மத்திய அரசு, தேசிய குங்குமப்பூ குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இந்த அமைப்பு ரூ.376 கோடி திட்ட செலவில் குங்குமப்பூ மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, கடந்த ஏழு மாதங்களில் இந்த அமைப்பு ஐந்து ஹெக்டர் நிலத்தை வாங்கியுள்ளது. அங்கு 128 ஆழ்குழாய் கிணறுகளை நிறுவி, குங்குமப்பூ சாகுபடியாளர்களுக்கு வசதியாக 3,715 தானியங்கி தண்ணீர் தெளிப்பான்களை வழங்கியுள்ளது.